DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.308/2024**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : கணேஷ்குமார்

Father Name : பொன்பாண்டியன்

VILLAGE :

CALLING :

AGE : 57

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மாவட்டம், காடுபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயம் நான் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, 13.08.2022ம் தேதி 15.00 மணிக்கு தலைமை காவலர் 1963 **அ.சா.1** பாண்டியராஜன், பெண் முதுநிலை காவலர் 254 **அ.சா.2** மகாலட்சுமி ஆகியோர்களுடன் புகையிலை மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக கொடிமங்கலம் அரசு பள்ளி அருகே ரோந்து செய்து வரும் போது சீருடையில் இருந்த எங்களை பார்த்து பெண் ஒருவர் சந்தேகத்திற்கு இடமாக இருந்தவரை பெண் காவலர் மூலம் பிடித்து விசாரித்த போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பாக்கெட்டுகளை பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பவர்களுக்கு விற்பதாக கூறினார். மேலும் அவரை பற்றி விசாரிக்க அவர் வெள்ளைத்தாய், வயது 61, க/பெ. முருகன், கிழக்கு தெரு, கொடிமங்கலம் என்று கூறினார். மேற்படி வெள்ளைத்தாய் அதிக நச்சுதன்மை கொண்ட போதை கொண்ட புகையிலை என தெரிந்தே விற்பனை செய்துள்ளார். எனவே 15.10 மணிக்கு குற்ற காரணம்

கூறி கைது செய்தேன். மேலும் அவரிடம் எவ்வித அச்சுறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்பு அவர் வைத்திருந்த வெள்ளை சாக்கில் இருந்த புகையிலையை அவராக முன்வந்து கொடுத்ததை பார்த்த போது கூல்லிப்ஸ் டொபாகோ என்ற பெயரிலுள்ள 108 கிராம் எடையுள்ள 23 பாக்கெட்டுகளும், கணேஷ் 701 டொபாகோ பெயரிலுள்ள 330 கிராம் எடையுள்ள 20 பாக்கெட்டுகளும் மேலும் அவர் வைத்திருந்த ரூ.930/–யும் வந்திருந்த காவலர் சாட்சிகள் முன்னிலையில் 15.45 மணிக்கு அத்தாட்சி மூலம் கைப்பற்றியும் பின்பு 16.30 மணிக்கு காவல்நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண்.266/2022 பிரிவுகள் 6(b), 7(2) Tobacco Act r/w 328 இ.த.ச வாக வழக்கு பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை மற்றும் அத்தாட்சியை நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவ இடமான கொடிமங்கலம் அரசு உயர்நிலைபள்ளிக்கு அருகில் உள்ள பகுதியானது அதிகபடியான மக்கள் மற்றும் வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் குறித்து மேற்படி பள்ளியினுடைய தலைமை ஆசிரியரோ, வாட்ச்மேன் மற்றும் இதர நபர்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எதிரியை நான் கைது செய்யவில்லை என்றாலும் அதனால் தான் நான் தனிநபர் சாட்சிகளை யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எதிரியிடமிருந்து எந்த சொத்துக்களும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தை பொறுத்து பார்வை மகஜர் எதுவும் தயார்

செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.23 18:07:58 +0530